

# கடைசிக்கால வெளிப்பாடுகள்!

## THE END-TIME REVELATIONS!

இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் விசேஷம் – ஓர் அறிமுகம்
(The Revelation of Jesus Christ - A Bird's eye view)

விஜயகுமார் சாமுவேல்

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்;
ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள். (மத்தேயு 24:44)

# கடைசிக்கால வெளிப்பாடுகள்!

## (The End-time Revelations!)

**இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் விசேஷம் – ஓர் அறிமுகம்**

**(The Revelation of Jesus Christ - A bird's eye view)**

**விஜயகுமார் சாமுவேல்**

Title : Kadaisikala Velippaadugal!

Language : Tamil

Frist Edition : January 2020

Copies : 3000

All Rights Reserved

Address : Vijayakumar Samuel
**Living Water Revival Ministries**

Email : livingwaterrevivalministry@gmail.com
livingwatersam@gmail.com

Website : www.livingwaterrevivalminstry.org

Mobil : +91 9444313658

Printed by : **Meippourl Achakam**
278, K. H. Raod, Ayanavaram,
Chennai - 600 023.
044 - 26741526; 9841955580

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தரிசனங்கள் வெளிப்படுத்தும் இரகசியம்! | | 5 |
| இதை வாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்! | | 7 |
| முடிவின் ஆரம்பம்! | | 9 |
| தரிசனங்களை விளங்கிக்கொள்ளும் வழிமுறை! | | 11 |
| தரிசனப் புஸ்தகச் செய்திகளின் சுருக்கம்! | | 13 |
| 1. | சபைகளுக்கான முதலாம் தரிசனம்! | 16 |
| 2. | கடைசிக்காலச் சம்பவங்களின் திருப்புமுனை! | 17 |
| 3. | உபத்திரவக்காலம் | 21 |
| 4. | கடைசிக்கால ஊழியங்கள்! | 25 |
| 5. | மகா பாபிலோனின் இரகசியம்! | 28 |
| 6. | ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்! | 34 |
| 7. | புதிய வானம் புதிய பூமி புதிய எருசலேம்! | 40 |
| நீங்களும் ஆயத்தமாயிருங்கள்! | | 43 |

வெளியாக்கப்படாத
மறைபொருளுமில்லை,
அறியப்படாத இரகசியமுமில்லை
(லூக்கா 12:2).

உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியா
யிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில்
என்னை அவனுக்கு வெளிப்படுத்தி,
சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்
(எண்ணாகமம் 12:6).

மறைவானவைகள் நம்முடைய
தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்;
வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த
நியாயப்பிரமாணத்தின் வார்த்தை
களின்படியெல்லாம் செய்யும்படிக்கு,
நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும்
என்றென்றைக்கும் உரியவைகள்
(உபாகமம் 29:29).

# இயேசுகிறிஸ்து

## வெளிப்படுத்தும் விசேஷம்

*ஓர் அறிமுகம்*

### தரிசனங்கள் வெளிப்படுத்தும் இரகசியம்!

இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலனாகிய யோவானுக்கு, தரிசனங்கள்மூலம் வெளிப்படுத்தின கடைசிக்கால நிகழ்வுகள், வேதாகமத்தில், வெளிப்படுத்தின விசேஷத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வுலகத்தின் முடிவில் சம்பவிக்க வேண்டியவைகள், தம்முடைய ஊழியக்காரர் என்று அறியப்பட்டிருக்கிற நமக்காகவும், இதை வாசிக்கிற, தியானிக்கிறவர்களுக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது.

**தொகுக்கப்பட்டிருக்கும் இந்தத் தரிசனங்கள்:**

- ★ இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிரமான வருகையையும், பிசாசும் அவனது சேனையும் பேரழிவிற்குட்பட இருப்பதின் நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறது.
- ★ இயேசுகிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தி, இந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரின் வருகைக்கு காத்திருக்க விசுவாசிகளை உற்சாகப் படுத்துகிறது.

- ★ தேவனுடைய பிள்ளைகள், விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், உண்மையிலும் அன்பிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருந்து நித்தியஜீவனை அடைய (மத்தேயு 24:13) ஊக்குவிக்கிறது.
- ★ உலகத்தின் ராஜ்யங்கள் (வெளி. 11:15) நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய ராஜ்யங்களாகி; அவர் சதாகாலங்களிலும் ராஜ்ய பாரம் பண்ணவிருப்பதைத் தெரிவிக்கிறது.
- ★ உபத்திரவங்களுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டிருக்கும் விசுவாசிகளை ஆறுதல்படுத்தி, நிறைவில் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் பெறவிருக்கும் நிச்சயமான வெற்றியை நினைப்பூட்டி உற்சாகப்படுத்துகிறது.
- ★ சாத்தானும் அவனோடிருக்கும் தீய சக்திகளும், அவிசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்பட இருப்பதை, இது உறுதிச்செய்கிறது.
- ★ தேவனுடைய முகத்தைத் தரிசிக்கும் ஆவலைத் தூண்டி, சமாதானமும் சந்தோஷமுமான வாழ்வை வாஞ்சித்து நாடித்தேட ஊக்குவிக்கிறது.
- ★ புதியவானம் புதியபூமியையும், சாபங்களில்லாத நித்தியராஜ்யத்தின் மகிமையையும் பரிசுத்தத்தையும் நினைப்பூட்டி பரவசப்படுத்துகிறது.

## இதை வாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்!

வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் வாசித்து விளங்கிக் கொள்ள, கர்த்தர் விரும்புகிறார். இந்தத் தரிசனங்கள் புரியக்கூடாதவைகள் அல்ல.

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோடவேண்டாம் (வெளி. 22:10) என யோவான் கட்டளைப்பெற்றார்.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமா யிருக்கிறது (வெளி. 1:3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிசாசானவன், தன்னுடைய நிச்சயமான அழிவை முன் னறிவிக்கும் இந்தச் சத்தியத்தை, தேவஜனம் அறிந்து எச்சரிக்கப்படுவதைத் தடைசெய்ய முற்படுகிறான். இது கடினமான வேதப்பகுதி என்பதைப்போன்ற தவறான எண்ணங்களை விதைக்கிறான்; பொய்யானச் செய்தி களைத் தன் ஊழியர் மூலம் பரப்புகிறான்.

இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட வர்களிலும் சிலர், வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கும்போது தடுமாறுகிறதையும், இந்த வசனங்க ளைத் தியானிக்கத் தயங்குகிறதையும் அறிவோம்.

இப்படியாக, இந்தச் சத்திய வார்த்தைகள் வெளிப் படுத்தும் உண்மையை அறிந்து உணர்ந்துகொள்ளா மல், இவ்வுலகின் உபத்திரவங்கள் நெருக்கங்களின் ஊடாகக் கடந்து செல்லும்போது சிலர், வாழ்வின் துன்பங்களுக்கு எதிர்த்துநிற்கத் திராணியற்றவர்களாய், சோர்ந்து மடிந்துபோகிறார்கள்.

வஞ்சகனின் பொய்யை நம்பி, துன்பங்களும் வேதனை களுமே வாழ்வு என அவற்றைப் பொறுமையாய் சகித்துக்கொள்ளப் பழகி, அறியாமல் வாழ்நாள் முழுவதும் பாடுகளுக்குட்படுவோரும் உண்டு.

வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைக ளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு (யோவான் 5:39) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். வேதாகமத்தை வாசிக் காமல் எவ்வாறு அவற்றைக் கைக் கொள்ளமுடியும்?

அநேகரால் புறக்கணிக்கப்படுகிற இந்தத் தரிசனப் பகுதிகளை நாம் வாசித்து தியானித்து கைக்கொள்ளுகிற பாக்கியவான்களாய் மாற அழைக்கப்படுகிறோம்.

நம்மைச் சுற்றிலுமெங்கும், துரிதமாய் நடந்தேறும் இயற்கையின் சீற்றங்கள், பேரழிவுகள், வஞ்சகங்கள், துரோகங்களைக் கண்டு உணர்வடைவோம். இந்தச் சம்பவங்களினால் எச்சரிக்கப்பட்டு, பூரண இரட்சிப் படைய ஒப்புக்கொடுப்போம்.

# முடிவின் ஆரம்பம்!

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம் (வெளி. 1:1) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு என்னும் தீவிலே, தேவவசனத்தின் நிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும், ரோம அரசாங்கத்தினரால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

பத்மு மத்தியதரைக்கடல் பகுதியில், எபேசு பட்டணத்திற்கு தென்மேற்கே சுமார் 80 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் ஒரு தீவாகும்.

அப்பகுதியிலுள்ள எரிமலைச் சிதறலினால் உண்டான கூர்மையான பாறைகளால் அந்தத் தீவு நிறைந்து இருந்தது. அந்தத் தீவின் கருங்கல் சுரங்கங்களில், அந்தச் சிறைக்கைதிகள் வேலைசெய்யும்படியாக நிர்ப் பந்திக்கப்பட்டார்கள்.

யோவான் பத்மு தீவில் சிறையிருப்பிலிருந்த காலங் களில், கடினமான சூழ்நிலையில், கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளானார் (வெளி. 1:9,10).

அப்பொழுது கர்த்தர், இவ்வுலகத்தின் முடிவில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தரிசனங்களாக யோவானுக்கு வெளிப்படுத்தினார்.

யோவான் தரிசனமாகக் கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும், புஸ்தகத்தில் எழுதும்படியாக கர்த்தர் அவருக்குக் கட்டளையிட்டார் (வெளி. 1:19).

இந்தத் தரிசனங்கள், அப்போஸ்தலனாகிய யோவான் பெற்றுக்கொண்ட வரிசையில் கி.பி. 95ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டு வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம் பெற்றுள்ளன.

கடைசிக்கால இரகசியங்கள் வெளிப்படுத்தும் வேதப் பகுதிகளைக் குறிப்பதற்கு அப்போகலிப்ஸ் (APOCALYPSE) என்கிற கிரேக்க சொல் பயன்படுத்தப்படுகிறது. இது மறைப்பொருள் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கிறது.

புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தின விசேஷமும்; பழைய ஏற்பாட்டின் தானியேல் புஸ்தகமும், சகரியா, யோவேல் தீர்க்கதரிசன புஸ்தகங்களின் பகுதிகளும்; புதிய ஏற்பாட்டின் மத்தேயு 24, 25 அதிகாரங்கள், மாற்கு 13ஆம் அதிகாரம், லூக்கா 21ஆம் அதிகாரமும், இந்த வகையைச் சார்ந்தவைகளாகும்.

# தரிசனங்களை விளங்கிக்கொள்ளும் வழிமுறை!

நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது (வெளி. 1:19) என யோவான் கட்டளைப்பெற்றார்.

கடைசிக்கால சம்பவங்களைப்பற்றின இந்தத் தரிசனங்களை விளங்கிக்கொள்ள, கண்டவைகள், இருக்கிறவைகள், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளை அடையாளம் காணவேண்டியிருக்கிறது.

**கண்டவைகள்** – தரிசனம் தந்த இயேசுவையும், தரிசனம்பெற்ற யோவானையும், யோவானுக்கு கொடுக்கப்பட்டப் பணிக் கட்டளையையும் விவரிக்கிறது.

**இருக்கிறவைகள்** – ஆதித்திருச்சபைகளின் ஆவிக்குரிய தன்மைகளையும், அவை நித்தியராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள செய்யவேண்டியவைகளையும் தொகுத்து அளிக்கிறது. இதுவே இந்நாட்களின் சபைகளுக்கு, அதாவது, நமக்கான எச்சரிப்பும் ஆலோசனைகளும் ஆகும்.

**பின்பு சம்பவிப்பவைகள்** – நான்காம் அதிகாரம் துவங்கி 22ஆம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதியில் தொகுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் இன்னும், இன்றும் நிறைவேறவில்லை.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில், கிருபையின் நாட்கள் மற்றும் சபையின் காலத்தின் முடிவில், சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. இதுவே ஏழுவருட உபத்திரவங்களின் துவக்கமாக இருக்கும்.

## தரிசனப் புஸ்தகச் செய்திகளின் சுருக்கம்!

இந்தப் புஸ்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் இரகசியங்களை, மேலோட்டமாக பார்க்கும்போது, இவை ஏழு பிரிவுகளாக அமைந்திருப்பதைப்போன்றுள்ளது.

**முதலாம்** பிரிவு, தரிசனம் தந்த மனுஷக்குமாரனுக்கு ஒப்பானவரையும், தரிசனம் பெற்ற யோவானையும், கட்டளையாக அவருக்கு கொடுக்கப்பட்ட பணியையும், முதலாம் அதிகாரத்தில் விவரிக்கிறது. இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில், சபைகளுக்கான தரிசனம் விவரிக்கப்பட்டுள்ளது.

நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது என்ற பொறுப்பைப் பெற்ற யோவான், அதைச்செய்து முடித்த விவரங்கள், எஞ்சிய ஆறு பிரிவுகளில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன.

பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரையும், அவரைச் சூழ்ந்து இருப்பவர்களையும், அங்கு நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், **இரண்டாம்** பிரிவில், நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் யோவான் விவரித்து எழுதியுள்ளார்.

ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்த வருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கும் காட்சி, கடைசிக்கால நிகழ்வுகளின் துவக்க விழாவைப் போன்று இந்தப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடரும், **மூன்றாம்** பிரிவில், கர்த்தர் எச்சரிக் கும் உபத்திரவக்கால நியாயத்தீர்ப்புகளின் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஆறாம் அதிகாரம் துவங்கி பதினாறாம் அதிகாரம் வரையிலுள்ள வேதப்பகுதியில், இவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றிற்கிடையே, உபத்திரவக்கால நிகழ்வுகளை தொடர்ச்சியாக விளங்கிக்கொள்ளுவதற்கு ஏதுவான சம்பவங்கள், 7,10 மற்றும் 11,12 முதல் 14 அதிகாரங் களில் அடைப்புப்பகுதிகளாக (Parenthetical Passages) இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பத்து மற்றும் பதினோராம் அதிகாரங்களில், பரிசுத்தப் பிதாவின் அன்பை வெளிப்படுத்தும் கடைசிக் கால ஊழியங்களின் விவரங்கள், **நான்காம்** பிரிவாக எழுதப்பட்டுள்ளன.

**ஐந்தாம்** பிரிவில், பாபிலோனின் அழிவு, பதினேழு மற்றும் பதினெட்டாம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகள் பத்தொன்பது மற்றும் இருபதாம் அதிகாரங்களில், எழுதப்பட்டுள்ளன. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண மும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்; ஆயிரங்கால அரசாட்சியும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும், **ஆறாம்** பிரிவில் விவரிக் கப்பட்டுள்ளன.

நிறைவாக **ஏழாம்** பிரிவு, கடைசி இரு அதிகாரங்களில், புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேமை விளங்கச் செய்கிறது.

தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் (வெளி. 22:17) எனும் அழைப்போடு இந்தத் தரிசன வார்த்தைகள் நிறைவுபெறுகின்றன.

## 1. சபைகளுக்கான முதலாம் தரிசனம்!

முதலாம் தரிசனத்தின் வார்த்தைகள், ஏழு கடிதங்களாக தொகுக்கப்பட்டு, 2 மற்றும் 3ஆம் அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தக் கடிதங்கள், சபைகளின் ஆவிக் குரிய நிலையையும், கிரியைகளையும் ஆராய்ந்தறிந்து, சபைகளின் நிறைவு மற்றும் குறைவுகளைத் தொகுத் தளிக்கிறது.

கர்த்தருடைய பாராட்டுகளும் ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் இவற்றோடு தொகுக்கப்பட்டு, இவை சபைகளுக்கான இடைக்கால ஆவிக்குரிய தேர்ச்சி அறிக்கையைப்போன்று (Interim Spiritual Progress Report) காணப்படுகிறது.

சபைகளைக் குறித்த இந்த வார்த்தைகளை, ரோம சாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியிலிருந்த எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா எனும் பட்டணங்களில் இருந்த ஏழு சபைகளுக்கும் அனுப்பும்படியாக யோவான் கட்டளைப் பெற்றார். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் (வெளி. 3:20) என்கிற வார்த்தைகளோடு முதலாம் தரிசனம் நிறைவுபெறுகிறது.

## ௨. கடைசிக்காலச்சம்பவங்களின் திருப்புமுனை!

யோவான் பெற்ற இரண்டாம் தரிசனம், நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளது. இவைகளுக்குப்பின்பு என்று நான்காம் அதிகாரத்தைத் துவக்குகிற யோவான், பரலோகத்திற்கு ஏறிவா எனும் கட்டளைப்பெற்று, பரலோகத்தின் காட்சிகளையும், இவைகளுக்குப் பின்னர் சம்பவிக்க வேண்டியவைகளையும் (வெளி. 4:1), புதிய தரிசனத்தின் வெளிப்பாடுகளாக எழுதிவைத்திருக்கிறார்.

சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து தேவனுக்கென்று ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொள்ளப்பட்டோரை அங்கே காண்கிறார் (வெளி. 5:9,10).

இந்தக் காட்சி, மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டமைப்பாகிய சபை கர்த்தருடைய வருகையில், அவருக்கு எதிர்கொண்டுபோய், மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வு (1 தெச. 4:17), அந்தக் காலக் கட்டத்தில் நடந்தேறியிருக்கும் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதனிமித்தம், இரண்டாம் தரிசனத்தின் துவக்கம், கிருபையின் நாட்களின் நிறைவையும், சபையின்

காலத்தின் முடிவையும் முன்னறிவிக்க இருப்பதாக அறியலாம். இது, அதிசீக்கிரமாய் நிகழவிருக்கும் இயேசு கிறிஸ்துவின் வருகையை வெளிப்படுத்தி உறுதிச்செய்யும்.

நான்காம் அதிகாரம் முழுமையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் தேவனின் மேன்மை யையும், மகிமையையும், அவருடைய உன்னதமான தீர்மானங்களையும், திட்டங்களையும் செயல்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிற கட்டமைப்புகளையும் விவரிக்கிறது.

வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத் துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல தோன்றிற்று. அந்தச் சிங்காசனத்தைச்சூழ இருபத்து நான்கு மூப்பர்களும், சுற்றிலும் நான்கு ஜீவன்களுமி ருந்தன.

இந்தப் பரலோகத்தின் காட்சியும், விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களும், கடைசிக்கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாக அமைந்துள்ளன.

ஐந்தாம் அதிகாரத்தின் காட்சியும் சம்பவங்களும், எஞ்சிய பகுதிகளில் புதைந்திருக்கும் இரகசியங்களை தெளிவு படுத்தும் திறவுகோலாக அமைந்துள்ளது. மேலும் இது, கடைசிக்கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரின்

பங்களிப்பை வெளிப்படுத்தி (வெளி. 5:6) உறுதிச் செய்கிறது.

## முத்திரிக்கப்பட்டிருக்கும் புஸ்தகம்!

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்திலே, உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரை களால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை யோவான் கண்டார். முக்கியமான தகவல்களைக்கொண்ட புஸ்தகச் சுருள்கள், அக்காலத்திலே, இவ்விதமாக முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்குமாம்.

ஆறாம் அதிகாரம் துவங்கிய வேதப்பகுதியில், இந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தகச்சுருளை, ஆட்டுக்குட்டியானவர் திறந்து, பூமியின்மேல் வருவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும், நியாயத்தீர்ப்புகளை நடப்பிக்க இருக்கிறார்.

சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொண்டு, கிறிஸ்துவின் ராஜ்யம் இவ்வுலகிலே ஸ்தாபிப்பதற்கான தேவனுடைய தீர்மானங்களையும், விரிவான திட்டங்க ளையும் இந்தச் சுருள் உள்ளடக்கியிருப்பதைப்போலத் தோன்றுகிறது. இது உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கும்.

ஆட்டுக்குட்டியானவர், சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்த வருடைய வலதுகரத்தில் இருந்த புஸ்தகத்தை வாங்க

விருக்கும் காட்சி, கடைசிக்கால நிகழ்வுகளின் துவக்க விழாவைப்போன்று அமைந்துள்ளது.

வரவிருக்கும் உபத்திரவக்கால நிகழ்வுகளுக்கும், நியாயத்தீர்ப்புகளுக்கும் இது ஆரம்பமாகும். இந்தச் சம்பவம் ஒரு உன்னதமான அதிகாரப் பரிமாற்றத்தை, பகிர்ந்தளிப்பை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது.

பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச்செய் யாமல், நியாயத்தீர்ப்புச்செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22).

ஆட்டுக்குட்டியானவர் அந்தப் புஸ்தகத்தை வாங்கி, நியாயத்தீர்ப்புச்செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, பரலோகத்தில் சடிதியான துதியும் பாடலும் மகிழ்ச்சியின் ஆரவாரமும் வெளிப்படவிருக்கிறது (வெளி. 5:8-10).

அம்மட்டும் இரகசியமாயிருந்த நியாயத்தீர்ப்புகளும், வாதைகளும் அதன் விவரங்களும் வெளிப்பட்டு, அதனதன் வேளையில் நிறைவுபெற இருக்கிறது.

சபை மறுரூபப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் காலமும், கிருபையின் நாட்களும் நிறைவுப் பெற்று, உபத்திரவக்காலம் துவங்கும்.

# 3. உபத்திரவக்காலம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம்வரைப் பதிவுசெய்யபட்டிருக்கும் நிகழ்வுகளில் பெரும்பாலானவை, கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் விளக்கங்களாகும்.

உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராத தும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறபோது (1 தெச. 4:13-18) சபையின் காலம், கிருபையின் நாட்கள் நிறைவுப்பெற்று, உபத்திரவக்காலம் துவங்கும்.

உபத்திரவக்காலம் தானியேலின் எழுபதாவது வாரம் (தானியேல் 9:24-27) என்றும்; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (எரேமியா 30:7) என்றும் குறிப்பிடப் படுகிறது. தானியேலின் தரிசனப்படி, எழுபதாவது வாரம் ஏழு ஆண்டுகள் என அறியலாம்.

எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா

வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார் (தானியேல் 9:25,26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தானியேலின் தரிசனப்படி, 69 வாரங்களைப்போன்றே இந்தக் காலங்களைக் கணக்கிடுவோமானால், எழுபதாவது வாரம் எனும் கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலம், ஏழு ஆண்டுகள் இருக்கும்.

- எருசலேம் கட்டப்பட ஆணை - அர்தசஷ்டா 20ஆம் வருஷம் நிசான் மாதம் - 14 மார்ச் கி.மு. 445இல் (நெகேமியா 2:1) வெளிப்பட்டது.

- மேசியா ராஜாவாக பவனி வரும் நிகழ்வு (சகரியா 9:9; லூக்கா 19:38) இயேசுகிறிஸ்துவின் ஊழிய நாட்களில் நான்காம் பஸ்கா, 6 ஏப்ரல் கி.பி.32 – அன்று நடந்தது.

- இன்றைய கால அளவின்படி இடைப்பட்ட நாட்கள் 476 X 365 = 173,740; லீப் ஆண்டுகள் 116; மார்ச் 14 முதல் ஏப்ரல் 6 வரை 24 நாட்கள்; ஆக மொத்தம்: 173,740 + 116 + 24 = 173,880.

- யூதகால அட்டவணைப்படி 69 X 7 X 360 = 173,880 இவை இரண்டும் சரியாக பொருந்துகிறது.

* இந்தக்கால கணக்கீடு, சபையின் காலத்தில், கிருபையின் நாட்களில் நிறுத்தி வைக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர், எழுபதாவது வாரமாக, ஏழு ஆண்டுகள் தொடர இருக்கிறது.

## உபத்திரவக்கால சம்பவங்கள் நம்மை:

* தேவனுடைய பரிசுத்தத்தினால் வெளிப்படும் நீதியையும் கோபாக்கினையையும் முன்னறிவித்து எச்சரிக்கிறது.

* உலகத்தைச் சார்ந்து செயல்படாமல், தேவசித்தத்தைச்செய்ய வழிநடத்துகிறது.

* தேவனுடைய கோபாக்கினைக்குட்பட இருக்கிறவர்களை விடுவிக்கும்படி, கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக அவர்களை எச்சரிக்க, நெருக்கி ஏவுகிறது.

இந்த வேதப்பகுதியில், அம்மட்டும் இரகசியமாயிருந்த 21 நியாயத்தீர்ப்புகளின் விவரங்கள், மூன்று பிரிவுகளாக, 7 முத்திரைகள் உடைக்கப்படும்போதும், 7 எக்காளங்கள் ஊதப்படும்போதும், 7 கோபக்கலசங்கள் ஊற்றப்படும் போதும் வெளிப்படவிருக்கிறது.

இந்த நியாயத்தீர்ப்புகளும் வாதைகளும், பூமியையும் சமுத்திரத்தையும் ஆகாயத்தையும் சேதப்படுத்தவும், பூமியில் உள்ளவர்களை வேதனைப்படுத்தவும் கொலை செய்யவும் அதிகாரத்தை உடையதாயிருக்கும்.

முத்திரைகள் உடைக்கப்படும்போது வெளிப்படும் நியாயத்தீர்ப்புகளால், பூமியின் காற்பங்கிலுள்ளவர்கள் கொலை செய்யப்படவிருக்கிறார்கள் (வெளி. 6:8).

எக்காளங்கள் ஊதப்படும்போது வெளிப்படும் ஆபத்துகளால், எஞ்சியுள்ள மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்படவிருக்கிறார்கள் (வெளி. 9:18).

அந்நிலையிலும், எஞ்சியுள்ளவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளையும், கொலைபாதகங்களையும், சூனியங்களையும், வேசித்தனங்களையும், களவுகளையும் விட்டு மனந்திரும்பமாட்டார்கள் (வெளி. 9:20,21).

## 4. கடைசிக்கால ஊழியங்கள்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் உபத்திரவக்கால நிகழ்வுகளுக்கு இடையே, இவைகளைச் சார்ந்த சில சம்பவங்கள், இவற்றிற்கு விளக்கம் அளிக்கும்வகையில், 3 பிரதானப் பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன.

இவைகள் தேவனுடைய திட்டங்களையும், கடைசிக்கால நிகழ்வுகளையும், நாம் தொடர்ச்சியாக, முழுமையாக அறிந்துக்கொள்ள உதவுகிறது. இந்தச் சம்பவங்களை, அடைப்புப்பகுதிகள் (Parenthetical Passages) என குறிப்பிடுகிறார்கள்.

ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதற்கும் ஏழாம் முத்திரை உடைக்கப்படுவதற்கும் இடையே, ஏழாம் அதிகாரத்தில் இருசம்பவங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இவை, இஸ்ரவேலரில் முத்திரிக்கப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ஊழியக்காரரையும்; ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒருவனும் எண்ணக்கூடாத திரள்கூட்டமான ஜனங்களையும் குறிப்பதாகும்.

இரண்டாவது பகுதி, ஆறாம் எக்காளம் ஊதப்படுவதற்கும், ஏழாம் எக்காளம் ஊதப்படுவதற்கும் இடையே,

வெளி. 10:1 முதல் 11:13 வசனங்களில் உள்ளது. இந்தப் பகுதி, கடைசிக்கால ஊழியங்களாக விவரிக்கப்பட்டி ருக்கிற, சிறு புஸ்தகத்தையும், இருசாட்சிகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

மூன்றாவதாக, 12ஆம் அதிகாரம் துவங்கி 14 வரையி லான வேதப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில், வானத்தில் தோன்றும் நான்கு அடையாளங்களும், பூமியில் காணப்படும் மூன்று அடையாளங்களும் விவரிக் கப்பட்டுள்ளன.

## உபத்திரவக்காலத்தில் வெளிப்படும் பிதாவின் அன்பு!

மிகவும் கொடிதான உபத்திரவக்காலத்தின் மத்தியிலும், தேவன் தம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, எஞ்சியுள்ளோர்களை நிர்மூலமாக்காமலும் கைவிடாம லும் இருந்து, அவர்களும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வாய்ப்புகளைத் தரவிருக்கிறார் (வெளிப்படுத்தின விசே ஷம் 10 மற்றும் 11ஆம் அதிகாரங்கள்).

தேவனுடைய அன்பின் வெளிப்பாடாக மனந்திரும்பு தலுக்கான அழைப்பு: மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் (வெளி. 10:11) என்கிற வார்த்தைகளில் வெளிப்படவிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, கர்த்தர் இரண்டு சாட்சிகளுக்கு 1260 நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அதிகாரம் கொடுக்கவிருக்கிறார். தேவனுடைய அபிஷேகம் நிறைந்த இரட்சிப்பிற்கேதுவான வார்த்தைகளை இவர்கள் வெளிப் படுத்துவார்கள்.

இதனிமித்தம், அந்நாட்களின் இறுதியில், மனுஷரில் மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்துவார்கள் (வெளி. 11:13).

## 5. மகா பாபிலோனின் இரகசியம்!

மகா பாபிலோனின் அழிவை விவரிக்கும் இரகசியங்கள், வெளிப்படுத்தின விசேஷம், 17 மற்றும் 18ஆம் அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

இவை, பாபிலோன் மகா நகரம் விழுந்தது (வெளி. 14:8); மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கி னையை கொடுக்கும்படி நினைப்பூட்டப்பட்டது (வெளி. 16:19) என்பவைகளின் விளக்கவுரையைப்போன்று அமைந்துள்ளன.

17ஆம் அதிகாரம், தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளை உடைய மதவழிபாட்டு அமைப் பின் (Religious System) அழிவையும்; 18ஆம் அதிகாரம், அரசியல் பொருளாதார கட்டமைப்பின் (Political and Economic System) அழிவையும் விவரிக்கிறது. இவை ஒரே நாணயத்தின் இருபக்கங்களைப் போலானது.

அங்கீகரிக்கப்பட்ட திருமண உறவுக்கப்பாற்பட்ட மாம்சீக உறவுகள், வேசித்தனமாகும். இவ்வகையான உறவுக ளைப்போன்று, தேவனோடுள்ள விசுவாச வாழ்வில் காணப்படும் உலகத்தோடு இசைந்த நிலை, ஆவிக்குரிய வேசித்தனமாகும்.

விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக்கோபு 4:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் அடையாளத்தைத் தரித்துக் கொண்டு, உலகத்தின் இச்சைகளுக்கும், ஆசாபாசங் களுக்கும் உட்பட்டு, தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளை உடையதாய் செயல்படும் அமைப்பே மகா வேசி.

மதவழிபாட்டு முறையில் உலகமயமாக்குதலுக்கு ஏதுவாக இந்த அமைப்பு, மதநல்லிணக்கம் என்ற பெயரில், பூமியின் ராஜாக்களையும், குடிகளையும் வஞ்சித்து திசைத் திருப்பும்.

இவ்வகையான அமைப்பில், தேவனுடைய கற்பனை கள், கட்டளைகளைக் கைக்கொள்ளுதல் வலியுறுத்தப் படாது. ஆதலால், அநேகர் இதில் ஆர்வம் காட்டுவார்கள்.

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்; அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்கிற உண்மைக்குப் புறம்பான “எம்மதமும் சம்மதம்” போன்ற கருத்துக்கள் தோன்றி, ஆவிக்குரிய வேசித்தனம் வெளிப்படும்.

இவ்வகையான தவறான நம்பிக்கையினால், ராஜாக்களும் தலைவர்களும், அந்தக் கொள்கைகளுக்கும் போதகங்களுக்கும் செவிகொடுத்து வஞ்சிக்கப்படுவார்கள்.

மகா வேசி என்கிற இந்த மத அமைப்பு, முன்னர் தேவனோடு சரியான உறவிலிருந்து, பின்னர் தேவனைவிட்டு விலகி, உலகத்தால் வஞ்சிக்கப்பட்டு, இச்சைகளுக்கு உட்பட்டு, மோசம்போனதாக அறிகிறோம்.

முடிவில், இந்த அமைப்போடிருக்கும் பத்து ராஜாக்களே அவளைப் பகைத்து, அவமானத்திற்குள்ளாக்கி, நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள் (வெளி. 17:16).

கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளால் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும் (2 பேதுரு 2:20).

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது, ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார் (லூக்கா 16:13).

## மகா பாபிலோன் விழுந்தது!

இவைகளுக்குப்பின்பு,வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; இவனுடைய மகிமையினால் பூமி பிரகாச மாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமா யிற்று (வெளி. 18:1,2) என்று விளம்பினான்.

பேய்களின் குடியிருப்பு, அசுத்த ஆவிகளின் காவல் வீடு என்பவை, இங்குச் சபைக்குப் புறம்பான மக்களிடையே காணப்படும் அருவருப்புகளைக் குறிக்கவில்லை.

இவை, முன்னர் ஜீவனுள்ள தேவனோடு தங்களை அடையாளப்படுத்தி, பின்னர் பிசாசு உலகம் மாம்சத் தினால் வஞ்சிக்கப்பட்டுச் சீரழிந்தச் சபைகளாகும்.

உண்மையாய் தேவனை ஆராதிக்கும் சபைகள், தேவனுடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டு, ஆவியா னவரின் பலத்தக் கிரியைகளை வெளிப்படுத்தும் இடங்களாக இருக்கும்.

இதற்கு மாறாக, இந்தச் சீரழிந்தச் சபைகள், கேளிக்கை களியாட்டு வர்த்தகமையங்கள் போன்று அருவருப்பான

செயல்களை நடப்பித்து, அசுத்த ஆவிகளின் உறை விடமாக செயல்படும்.

தேவனிடத்திலிருந்து இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்ள விரும்புகிற யாவரும், இப்படியான, பாபிலோனைவிட்டு வெளியே வர கட்டளைப்பெறுவார்கள் (வெளி. 18:4,5).

இதற்குச் செவிகொடாதபட்சத்தில், பாபிலோனுடைய பாவங்களுக்கு உடன்பட்டு, அவளுக்கு நேரிடும் வாதைக ளில் அகப்படுவார்கள். அவளுடைய வேசித்தனத்தின் பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்க, அந்த அமைப்பு களைவிட்டு விலகி, அழிவிற்கு முன்னர் வெளியேறுவது அவசியமாயிருக்கும்.

இவ்வகையான அமைப்புகளிலோ அல்லது சபைக ளிலோ அவர்களோடு ஐக்கியப்பட்டிருப்பது, பாவத்திற்குட் படுத்தும் வாய்ப்புகளை உண்டாக்கும்.

நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரி. 6:17). இந்த அமைப்புக ளோடு சேர்ந்து அழிந்துபோகாமலிருக்க நாமும் எச்சரிக்கப்படுகிறோம்.

**எச்சரிக்கை :** செத்த சபை என அறியப்பட்டிருந்த சர்தை யிலும் வெண்வஸ்திரம் (வெளி. 3:4) தரித்தோர் இருந்தார்கள். உண்மையோடு வசனத்தைக் காத்துக் கொண்ட பிலதெல்பியா சபையிலும் (வெளி. 3:9) சாத்தானுடைய கூட்டத்தார் இருந்தனர்.

ஆகையால், காலத்தையும், குடியிருப்பின் எல்லை யையும் முன் குறித்திருக்கும் (அப். 17:26) தேவனுடைய சித்தம் அறிந்து, செயல்பட அழைக்கப்படுகிறோம்.

## 6. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளான ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், அதனைச் சார்ந்த சம்பவங்களும், 19ஆம் அதிகாரத்தில் தொகுக் கப்பட்டுள்ளன.

ஆட்டுக்குட்டியானவருக்கும், மீட்கப்பட்ட பரிசுத்தவான் களின் கூட்டமைப்பான சபைக்கும் உள்ள உறவின் நிறைவை, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வெளிப் படுத்துகிறது.

கிருபையின் நாட்களில், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது ஸ்தாபிக்கப்படும் உறவில், முடிவு பரியந்தம் ஆயத்தத்துடன் நிலைத்திருப்போர், இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில், அவருடன் சபையாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

இப்படியாக, மறுரூபப்படவிருக்கும் சபை, சதாகாலமும் அவரைச் சார்ந்து செயல்படும் வாழ்வின் துவக்கம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணமாகும்.

இது இரட்சகருக்கும் இரட்சிக்கப்பட்ட தேவஜனத்துக்கும் இடையே ஏற்படவிருக்கும் ஆவிக்குரிய உறவின் நிறைவை வெளிப்படுத்தும் உருவகமாகும். (உயிர்த்

தெழுதலில், கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப் பார்கள் – மத்தேயு 22:30).

இதன் வளர்ச்சிப்பரிணாமம், யூதகுலத்து கலியாண சம்பிரதாயங்களைப்போன்றே அமைந்துள்ளது. மண மகனின் பெற்றோர் மணமகளைத் தெரிந்தெடுத்து தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பார்கள்.

மணமகளும் பெற்றோரும் இதை ஏற்றுக்கொள்ளும் போது, பரிசுகள் கொடுத்து (கிரயம் செலுத்தி) இந்த உறவை நிச்சயம் செய்வார்கள். இந்நிலையில் மண மக்கள் சேர்ந்து வாழாமல், ஒரு வருடம்போல குறிப்பிட்ட காலத்துக்கு தங்கள் வீட்டிலேயே பெற்றோருடன் தனித்து இருப்பார்கள்.

இந்தக் காத்திருப்பின் காலம், மணமக்கள் இந்த உறவில் விருப்பத்தோடு இருப்பதையும், மணமகளின் பரிசுத்தத் தையும், உறுதிச்செய்யும் காலமாக இருக்கும்.

இந்தக்காலம் நிறைவேறும்போது, பெற்றோரின் வார்த்தையின்படி, மணமகன், மணமகளை தன்னுடைய நண்பர்களோடுச் சென்று தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வருவார். நிறைவில் கலியாணம் சிறப்பாக நடந்தேறும்.

யூதகுல கலியாண வழக்கங்களைப்போன்றே, இயேசுவுக்கென மணவாட்டியாக நியமிக்கப்பட்டிருக்கிற நாம் (2 கொரி. 11:2; ஓசியா 2:19,20), பிதாவாகிய தேவனால் கிரயத்துக்குக் கொள்ளப்படுகிறோம் (1 கொரி. 6:20).

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கிருபையின் காலம், கர்த்தரை அறிந்தவர்களாய், ஆயத்தத்தோடு இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருக்கும் நாட்களாகும்.

இந்தக் காத்திருப்பின் காலம், கிறிஸ்துவோடுள்ள உறவில், அர்ப்பணிப்பில் உறுதியோடு, பரிசுத்தத்தில் நிலைத்திருப்பதை நிருபிக்க நியமிக்கப்பட்டிருக்கிற காலமாகும்.

இந்தக் காலத்தில், நாம் ஜாக்கிரதையாய் விழித்திருந்து, விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும், அன்பிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருந்து இன்னும் அதிகமாய் பெருகவும், ஆலோசனைப் பெற்றிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவை இன்னும் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாதவர்களும், ஆயத்தமாயிராதவர்களும், இரகசிய வருகையில் மறுரூபப்படும் மணவாட்டி சபையில் ஒருவராக இருக்கமுடியாது என்பது இங்கு வெளிப்படும் உண்மையாயிருக்கிறது.

## இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை!

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, பிரமிக்கத்தக்கதான மிகப்பெரிய நிகழ்வாயிருக்கும். அப்பொழுது பூமியிலுள்ள அனைவரும் (வெளி. 1:7) அவரைக் காண்பார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் வருகையில் அவர் சமாதானத்தை உண்டு பண்ண வந்தார். இரண்டாம் வருகையில் அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ண வரவிருக்கிறார்.

முதலாம் வருகையில் இயேசு பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்து வந்தார்.

தம்முடைய பாடுமரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குள் பவனியாகச் சென்றார்.

இரண்டாம் வருகையில் அவர் தாம் நிச்சயமாக பெறவிருக்கும் வெற்றியை வெளிப்படுத்தும் வகையில் வெள்ளைக் குதிரையின்மேல் ஏறிவரவிருக்கிறார்.

முதலாம் வருகையில் இயேசுகிறிஸ்து இரட்சகராக வெளிப்பட்டார். இரண்டாம் வருகையில் அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வரவிருக்கிறார்.

பூமியின் ராஜாக்களோடும் அவர்களுடைய சேனைக ளோடும் அவர் யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிப்பார்.

அக்காலத்தில், அந்திக்கிறிஸ்து என்று அறியப்பட்டிருக் கிற மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்படவிருக் கிறார்கள். இந்த மிருகங்கள், கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி. 19:20).

## ஆயிரம் வருஷ அரசாட்சி!

இருபதாம் அதிகாரம், பிசாசானவன் ஆயிரம் வருஷ மளவும் செயல்படக்கூடாமல் கட்டப்படவிருப்பதையும், பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும், கிறிஸ்து வுடனேகூட அவர்களின் ஆயிரம் வருஷ அரசாட்சியையும் விவரிக்கிறது.

அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாக்கப்பட இருப்பதையும், கிறிஸ்துவுக்கு விரோதமாக பூமியில் எழும்பும் சாத்தானின் கிளர்ச்சியையும் முன் அறிவிக்கிறது.

இதைத் தொடர்ந்து, சாத்தானால் மோசம்போன மண லத்தனையானவர்களின் அழிவையும், மரணமடைந்த எஞ்சியுள்ளோர்களின் உயிர்த்தெழுதலையும், பெரிய வெள்ளைச் சிங்காசன கடைசி நியாயத்தீர்ப்பையும் விளக்குகிறது.

பிசாசானவன் ஆயிரம் வருடங்கள் செயல்படக்கூடாமல் கட்டப்பட்டு, நிறைவில், அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டு, இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்பட இருப்பதை (வெளி. 20:10) இந்த வசனங்கள் எடுத்துரைக்கிறது.

இந்த உண்மையை தேவஜனம் அறியாமலிருக்க, பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசான வன், அநேக கல்விமான்களையும் வஞ்சித்து திசைத் திருப்பி இருப்பதைப்போலத் தோன்றுகிறது.

ஏனென்றால், இந்த வசனத்தின் விளக்கமாக, அவர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு ஏற்றவாறு, சர்ச்சைக் குரிய பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

இதனிமித்தம், இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகையைப்பற்றியதான இந்த வேதப்பகுதி, அதிக மான விவாதத்திற்குரிய பகுதியாக காணப்படுகிறது.

## 7. புதிய வானம் புதிய பூமி புதிய எருசலேம்!

மீட்கப்பட்ட தேவஜனம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும், தேவனுடைய ராஜ்யத்தின் விவரங்களும் விளக்கங்களும், இந்தத் தரிசனப்புஸ்தகத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயி ருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வசனத்திற்கேற்ப, புதுச்சிருஷ்டிப்பின் நிறைவான பாக்கியநிலை, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் என்பதாக, இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

வரும் நாட்களில் கண்டு அனுபவிக்கவிருக்கும் பரலோக மேன்மைகளின், சிலதுளிகளே இங்குச் சொல்லப்பட்டி ருக்கிறது.

தொகுக்கப்பட்டிருக்கும் விவரங்கள், இந்நாட்களில் அறிந்துணர்ந்துகொள்ளுவதற்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது

## தேவன் ஆவியினாலே வெளிப்படுத்தினார்!

இங்கு பட்டியலிடப்பட்டிருக்கும் தகவல்களும் விவரங் களும் மிகவும் சொற்பமானவைகள் என்று அறியும் போது,

இவைகளின் முழுமை, யூகித்தும் பார்க்கக்கூடாததாய்த் தோன்றுகிறது.

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர் களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவு மில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:9,10).

நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் நித்திய குடியிருப்பை விவரித்துச் சொல்ல, நாமறிந்த மொழிகளில் வார்த்தைகளைக் காண்பதரிது என்பது இங்கு யதார்த்தமாயிருக்கிறது.

அந்த நித்தியராஜ்யத்தைச் சுதந்தரிக்க, இந்நாட்களில் வெளிப்படும் எச்சரிப்புகளுக்குச் செவிகொடுத்து ஆயத் தப்பட நாம் அழைக்கப்படுகிறோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இறுதி வாக்குத்தத்தத்தோடும், இந்தத் தரிசனங்களைப் பதிவுச் செய்த யோவானின் மறுமொழியோடும், வாழ்த்துத லோடும், இந்த அத்தியாயம் நிறைவுப்பெறுகிறது.

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென்,

கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென் (வெளி. 22:20,21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில், இயேசுகிறிஸ்துவின் கடைசிவார்த்தைக ளாக பதிவுசெய்யபட்டவைகள், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்பவைகளாகும்.

## நீங்களும் ஆயத்தமாயிருங்கள்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விசேஷங்கள் யாவும், முழுவதுமாக நமக்காகவே, உங்களுக்கும் எனக்காகவுமே எழுதப்பட்டிருக்கிறது.

இந்தத் தரிசன வார்த்தைகளின் பிரதான நோக்கம், கிறிஸ்துவின் அன்பை அறிந்து உணர்ந்து, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள நாம் விழித்திராமல், அஜாக்கிரதையினால் நமக்கருளப்பட்டிருக்கிற இந்தக் காலத்தை, வாய்ப்பை, இழந்துவிடக்கூடாது என்பதே ஆகும்.

இனிக்காலம் செல்லாது. நீங்கள் நினையாத நாழிகை யிலே மனுஷகுமாரன் வர இருக்கிறார். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:16) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம் (ரோமர் 13:12).

நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள் ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி. 22:11) என்கிற

வார்த்தையின்படி, நீதிசெய்யவும், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்திலும், உண்மையிலும், அன்பிலும், சாந்தத் திலும், மனத்தாழ்மையிலும் நிலைத்திருக்கவும், நம் மையே அர்ப்பணிப்போம்.

விவரிக்கப்பட்டிருக்கும் எல்லா வாதைகளுக்கும் விலக்கிப் பாதுகாக்கப்பட, கர்த்தருடைய இரகசிய வருகையிலே நாம் அவரோடே எடுத்துக்கொள்ளப்பட்டு, நித்தியராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள, கர்த்தர் கிருபையருள்வாராக. ஆமென்.

# ஜீவத்தண்ணீர் எழுப்புதல் ஊழியங்கள்

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44)

## ஊழிய தரிசனம்

(Vision) தேசத்தின் இரட்சிப்பு – அமைப்பைச் சாராத ஊழியர் மூலமாகவும் இரட்சிப்பு துரிதமாக் கப்பட்டு, தேசம் எழுப்புதலுக்குட்படவேண்டும்.

## ஊழிய திட்டம்

(Plan) எந்த ஒருசபை அமைப்பையோ நற்செய்தி இயக்கத்தையோ சாராது, இயேசுகிறிஸ்துவையே சார்ந்து செயல்படும் வாஞ்சையுள்ள ஊழியர்கள் / இளம் வாலிபர்களை அடையாளங் கண்டு ஐக்கியப்படு வோம். அவர்களை ஊக்குவித்து தகுதிப்படுத்தி, கர்த்தருக்காக அவர்கள் எல்லைகளில் செயல்பட உதவுவோம்.

(ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங் கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச்செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கிய வான்– மத்தேயு 24:45,46)

## தீர்மானங்கள் /திட்டப்பணிகள் : (Programs/ Projects)

1. **ஜெபக்கூடுகைகள் (Prayer Gatherings):** ஜெபிக்க வாஞ்சை யுள்ளவர்களை அடையாளங்கண்டு ஐக்கியப்படுவோம். அவர்கள் குடியிருப்பின் எல்லைகளில் ஜெபக்கூடுகைகள் ஸ்தாபித்து செயல்பட உதவுவோம்.

2. **ஆயத்தப்படு (MOBILIZE):** ஆரம்ப நிலை ஊழிய அறிமுகம் வேதாகமத்தின் அடிப்படையில் ஊழியஞ்செய்ய வாஞ்சிக்கிற இளம் விசுவாசிகளுக்கு, அவர்கள் எல்லைகளிலேயே முறைப் படி சத்தியத்தை எடுத்துரைக்க பாடத்திட்டங்கள், வசதிகள் ஏற்படுத்துவோம் (Ministry Orientation for Beginners an Initiative to evangelize India).

3. **செயல்படு (PERFORM)**: கடைசிக்கால எழுப்புதல் ஊழியத்திற் கென தெளிவும் மீட்பும் அடைந்த ஒரு திரள்கூட்ட ஊழியர்களை ஆயத்தப்படுத்துவோம். (Prepare an Enlightened and Redeemed Force to Organize Revival Ministries for the End Times).

4. **ஜெப சுற்றறிக்கை (News Letter):** ஜெபபங்காளர் களின் சாட்சி மற்றும் ஜெபக்குறிப்புகளைத் தொகுத்து தேவசெய்தியோடு ஜீவத்தண்ணீர் விசுவாச ஜெப சுற்றறிக்கையாக பங்காளர்க ளுக்கு வெளியிடுவோம்.

5. **புத்தக ஊழியம் (Books):**

   மின்னணுவடிவில் (e-book) புத்தகங்கள் ஜீவத்தண்ணீர் இணைய தளத்தில் உள்ளன:

   http://www.livingwaterrevivalministry.org/e-book-tamil

# Notes

# Notes

# கடைசிக்கால வெளியீடுகள்!

## புத்தகங்கள் (Books)

நீங்கள் எந்தச் சபை?
– ஏழு சபைகளுக்கான தரிசனம் (ஜனவரி 2016)
இதன் விரிவான ஆங்கில பதிப்பு
– Revelation to the churches (March 2018)
கடைசிக்கால இரகசியங்கள்!
– தரிசனங்களின் விளக்கங்கள்
(பதிப்பகத்தில் உள்ளது)

## சிறு புத்தகங்கள் (Booklets)

கடைசிக்கால வெளிப்பாடுகள் ! – வெளிப்படுத்தின விசேஷம் – ஓர் அறிமுகம்! (ஜனவரி 2020)
கடைசிக்கால ஊழியங்கள்! –
உபத்திரவக்காலத்தில் பிதாவின் அன்பு!
(அச்சில் உள்ளது)
கடைசிக்கால எச்சரிப்புகள்! – நினையாத நாழிகையில் இயேசுகிறிஸ்து! (அச்சில் உள்ளது)

## மற்றப் புத்தகங்கள் (Other Books)

ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்கள் –
சங்கீதங்களில் புதைந்துள்ள சாட்சியின் வசனங்கள் (ஜுன் 2018)

(இவை மின் வடிவில் – ஜீவத்தண்ணீர் இணையத்தளத்தில் உள்ளன)

http://www.livingwaterrevivalministry.org/e-book-tamil

**ஜீவத்தண்ணீர் எழுப்புதல் ஊழியங்கள் - 9444313658**

Contact : livingwaterrevivalministry@gmail.com
www.livingwaterrevivalministry.org